# January 12, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பாதுகாப்பு, புவிக் கண்காணிப்புக்கான இஓஎஸ்-என் 1 உள்பட 16 செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்துவதற்காக பிஎஸ் எல்வி சி-62 ராக்கெட் திங்கள்கிழமை (ஜன.12) ஏவப்பட உள்ளது.

(i) பாதுகாப்புத் துறைப் பயன்பாட்டுக்கான இஓஎஸ்- என் 1 (அன்விஷா) எனும் அதிநவீன செயற்கைக்கோளை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்டிஓ) தயாரித்துள்ளது.

(ii) இந்தச் செயற்கைக்கோள் பிஎஸ்எல்வி சி-62 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் ஆய்வு மையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து திங்கள்கிழமை காலை 10.17 மணிக்கு விண்ணில் ஏவப்பட உள்ளது.

(iii) இதனுடன் இந்திய மற்றும் வெளிநாடுகளுக்குச் சொந்தமான 15 சிறிய செயற்கைக்கோள்களும் செலுத்தப்பட இருக்கின்றன.

(iv) முதன்மைச் செயற்கைக்கோளான இஓஎஸ்-என் 1 தரையில் இருந்து 505 கி.மீ. தொலைவு கொண்ட சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

(v) மற்ற செயற்கைக்கோள்களில் ஆயுள்சாட் சென்னையைச் சேர்ந்த ஆர்பிட்எய்டு எனும் ஸ்டார்ட் அப் நிறுவனம் தயாரித்தது. இது புவிவட்டப் பாதையில் சுற்றி வரும் செயற்கைக்கோளில் மீண்டும் எரிபொருள் நிரப்புதல் குறித்த ஆய்வை மேற்கொள்ள உள்ளது.

2. நேபாளத்தில் மீண்டும் மன்னராட்சியை அமல்படுத்தக் கோரி தலைநகர் காத்மாண்டில் பேரணி நடத்திய முன்னாள் மன்னர் குடும்ப ஆதரவாளர்கள். நேபாளத்தில் ஷா வம்சத்தை நிறுவிய 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மன்னர் பிருத்வி நாராயண் ஷாவின் பிறந்த நாளையொட்டி இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

3. சென்னையில் முதன்முறையாக நடைபெற்ற ஒலிம்பிக் தூர டிரையத்லான் நிகழ்வான, அயன்மேன் 5i50 டிரையத்லான் சென்னை போட்டியில் இந்திய அணியினர் சிறப்பிடம் பெற்றனர்.

4. பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் மகளிர் பிரிவில் அரினா சபலென்காவும், ஆடவர் பிரிவில் டேனில் மெத்வதேவும் பட்டம் வென்றனர்.

(i) கிராண்ட்ஸ்லாம் பந்தயமான ஆஸ்திரேலிய ஓபனுக்கு முன்னர் பிரிஸ்பேன் டென்னிஸ் போட்டி நடைபெறுவது வழக்கம். இது ஆஸி. ஓபனுக்கு வீரர், வீராங்கனைகள் தயார்படுத்திக் கொள்ளும் வகையில் அமையும்.

5. ஜெர்மனி பிரதமர் ஃப்ரீட்ரிக் மெர்ஸ், இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வரவுள்ளார்.

(i) குஜராத் மாநிலம், அகமதாபாதில் பிரதமர் நரேந்திர மோடியுடன் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

(ii) உலகளாவிய புவி-அரசியல் பதற்றத்துக்கு மத்தியில் இந்திய-ஜெர்மனி

தலைவர்களின் சந்திப்பு கவனம் பெற்றுள்ளது.ஜெர்மன் பிரதமராக ஃப்ரீட்ரிக் மேற்கொள்ளும் முதல் ஆசிய மற்றும் இந்திய பயணம் இதுவாகும்.

(iii) இரு பிரதமர்களின் சந்திப்பில் வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, முக்கிய தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட துறைகளில் நல்லுறவை மேம்படுத்துவது மட்டுமன்றி பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் ஆலோசிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

(iv) உக்ரைனில் அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிமுறைகள் குறித்தும் இருவரும் ஆலோசிக்கக் கூடும் எனத் தெரிகிறது.

(v) இந்தப் பயணத்தின் முதல்கட்டமாக, சபர்மதி ஆசிரமத்தை பிரதமர் மோடியுடன் ஜெர்மனி பிரதமர் மெர்ஸ் பார்வையிட உள்ளார். பின்னர், இருவரும் சர்வதேச காற்றாடி திருவிழா மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவிருக்கின்றனர். இதைத் தொடர்ந்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

(vi) இந்தியப் பொருள்கள் மீது அமெரிக்கா 50 சதவீத இறக்குமதி வரி விதித்துள்ள சூழலில், ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை இந்தியா வலுப்படுத்தி வருகிறது. எனவே, மோடி-மெர்ஸ் பேச்சுவார்த்தையில் வர்த்தகம் மற்றும் முதலீடு விவகாரங்கள் முக்கிய இடம்பெறும் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அக மதாபாத்தில் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்ட பிறகு ஜெர்மனி பிரதமர் பெங்களூருக்கு செல்லவுள்ளார்.

(vii) இந்தியாவின் முக்கிய கூட்டாளி: ஐரோப்பாவில் இந்தியாவின் மிக முக்கிய கூட்டாளியாக ஜெர்மனி விளங்குகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக நாடும் ஜெர்மனிதான். கடந்த 2024-25-இல் இருதரப்பு வர்த்தக மதிப்பு 51.23 பில்லியன் டாலரை எட்டியது. முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில் இது 12.5 சதவீத உயர்வாகும்.

(viii) ஐரோப்பிய ஒன்றியத்தில் கிட்டத்தட்ட நான்கில் ஒருபங்கு வர்த்தகம் ஜெர்மனியுடன் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஒன்றியத்தில் செல்வாக்குமிக்க நாடான ஜெர்மனி, இந்தியாவில் அதிக அந்நிய நேரடி முதலீடு செய்யும் நாடுகளில் 9-ஆவது இடத்தில் உள்ளது.

(ix) கடந்த 25 ஆண்டுகளில் 15.40 பில்லியன் டாலர் அந்நிய முதலீடு கிடைக்கப் பெற்றுள்ளது. தற்போது 2,000-க்கும் மேற்பட்ட ஜெர்மனி நிறுவனங்கள் இந்தியாவில் செயல்படுகின்றன.

(x) நீர்மூழ்கி ஒப்பந்தம் கையொப்பம்?:

இந்தியா-ஜெர்மனி இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு அதிகரித்து வரும் நிலையில், அந்நாட்டிடம் இருந்து இந்திய கடற்படைக்கு ஸ்டெல்த் ரக 6 நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொள்முதல் செய்வதற்கான அரசுத் தரப்பு ஒப்பந்தம் இரு பிரதமர்கள் சந்திப்பில் கையொப்பமாக கூறப்படுகிறது. வாய்ப்புள்ளதாக

(xi) கல்வி, எரிசக்தி, திறன் மேம்பாடு, மக்கள் ரீதியிலான தொடர்புகள் உள்ளிட்ட

துறைகளிலும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. இந்தியா-ஜெர்மனி இடையே வியூக கூட்டாண்மை நிறுவப்பட்டு, கடந்த ஆண்டுடன் 25 ஆண்டுகள் நிறைவடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(xii) விரைவில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்: ஜெர்மனி பிரதமர் மெர்ஸின் பயணத்தைத் தொடர்ந்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்நிலை தலைவர்கள் பலர் இந்தியாவுக்கு அடுத்தடுத்து பயணம் மேற்கொள்ள விருக்கின்றனர். பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான், அடுத்த மாதம் இந்தியா வரவுள்ளார். இப்பயணங்களின் பலனாக, இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. ஜனவரி 12 ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

7. சர்வதேச அளவில் அனைத்து வகையான கிரிக்கெட் ஆட்டங்களிலும் அதிக ரன்கள் அடித்த வீரர்கள் வரிசையில் விராட் கோலி இரண்டாவது இடத்துக்கு உயர்ந்தார்.

(i) முதலிடத்தில் சச்சின் டெண்டுல்க ரும் 34,357 ரன்கள் (644 இன்னிங்ஸ்). இரண்டாவது இடத்தில் குமார் சங்ககராவும் 28,106 ரன்கள் (666 இன் னிங்ஸ்), 42 ரன்கள் எடுத்தால் சங்ககராவின் சாதனையை கோலி முறியடிப்பார் என்ற நிலையில் நியூஸிலாந்துடன் நடைபெற்ற முதல் ஒருநாள் ஆட்டத்தில் விராட் கோலி 93 ரன்களைவிளாசி புதிய சாதனையை நிகழ்த்தினார்.